[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபைச் சட்டம்

---

[*1999, நவெம்பர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, நவெம்பர் 12 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 11.50** **தபாற் செலவு : ரூபா 5.25**

**1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை சட்டம்**

[*1999 ஆம் நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. – ஒ. 22/99*

**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை என அழைக்கப்படும் சபையொன்றைத் தாபிப்பதற்கும்; விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் கட்டுப்பாடு, முகாமை மற்றும் நிருவாகம் ஆகியவற்றை அந்தச் சபைக்கு உரித்தளிப்பதற்கும்; மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*1998 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட விஜய குமார துங்க ஞாபகார்த்த மன்றமானது, காலஞ்சென்ற திரு. விஜய குமாரதுங்கவின் ஞாபகத்தை இடையறாது பேணுவதற்கு, சீதுவையில், இச்சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணி மற்றும் வளவுகளுக்குள் வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்துள்ளதாதலாலும்,* முன்னுரை.

*அத்தகைய வைத்தியசாலையானது, இலங்கையின் எல்லாச் சமூகங்கள் மற்றும் மக்களிடையே சமாதானத்தையும் நல்லெண் ணத்தையும் மேம்படுத்துவதற்கான மறைந்த திரு. விஜய குமாரதுங்கவின் சிந்தனையை முன்னேற்றும் ஒரு நோக்கத்துடன் நிர்வகிக்கப்படுவதும் முகாமைசெய்யப்படுவதும் சொல்லப்பட்ட மன்றத்தின் முகாமைச்சபையின் விருப்பமாகவுள்ளதாதலாலும் ;*

*இந்த நோக்கத்திற்காக வைத்தியசாலையின் கட்டுப்பாடு, முகாமை மற்றும் நிருவாகம் ஆகியவற்றைத் தன்னிச்சையான சபையொன்றிடம் உரித்தாக்குவது அவசியமானதாதலாலும் ;*

*சொல்லப்பட்ட மன்றத்தின் முகாமைச்சபை இந்த நோக்கத்திற்காகச் சட்ட ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென வேண்டியுள்ளதாதலாலும் மற்றும் அத்தகைய வேண்டுதலை வழங்குவது பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :*

*ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :*

***1.*** *இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.* சுருக்கப் பெயர்.

H- 022545

*விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையைத் தாபித்தல்.*

**2.** (1) விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் (இதனகத்துப்பின்னர் "வைத்தியசாலை" எனக் குறிப்பீடு செய்யப் படும்) அலுவல்களை முகாமை செய்யும் மற்றும் நிருவகிக்கும் நோக்கத்திற்காக விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்திய சாலைச் "சபை" என அழைக்கப்படும் (இதனகத்துப்பின்னர் சபை என அழைக்கப்படும்) சபையொன்று தாபிக்கப்படல் வேண்டும். அச்சபை இச்சட்டத்தின் அட்டவணையில் விதித் துரைக்கப்படும் காணி மற்றும் கட்டடங்களைக் கொண்டிருக்கும்.

(2) சபையானது, உட்பிரிவு (1) இன் மூலம் அதற்கெனக் குறித்தொதுக்கப்படும் பெயரில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் வழக்குத் தொடுக்கவும் படலாம்.

*சபையை அமைத்தல்*

**3.** (1) சபையானது, அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) சபையின் தவிசாளர் இவர் இவ்வுட்பிரிவின் (v) ஆம் பந்தியின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(ii) அமைச்சரால் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்படும் அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதி ஒருவர் ;

(iii) வைத்தியசாலையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள மருத்துவர்களிடையேயிருந்து அவர்களால் தெரிவு செய்யப்படும் ஓர் ஆள் ;

(iv) தொழிற்றுறையொன்றில் சிறப்புபெற்ற அத்துறை யின் உறுப்பினர் ஒருவர் மற்றும் ;

(v) விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும், அம்மன்றத்தால் பெயர் குறிப்பீடு செய்யப்படும் நான்கு உறுப்பினர்கள்.

(2) தலைவரும் சபையின் ஏனைய ஒவ்வொரு உறுப்பினரும் அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதி யொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) சபையின் தவிசாளர் அல்லது எவரேனும் வேறு உறுப்பினரின் பதவி வறிதாகுமிடத்து, அவருக்குப் பின்னுறும் வேறொரு ஆளை தவிசாளர் அல்லது உறுப்பினரின் பதவியை வகிப்பதற்காக, விடயத்துக்கேற்றவாறாக, தவிசாளரின் அல்லது உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலப் பகுதிக்கு அமைச்சர் நியமிக்கலாம்.

(4) சபையின் தவிசாளர் அல்லது வேறு எவரெனும் உறுப்பினர் சுகவீனம் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் அவரது கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருப்பின் அவரது இடத்தில் தவிசாளராக அல்லது உறுப்பினராகச் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை, விடயத்துக்கேற்றவாறு அமைச்சர், நியமிக்கலாம்.

(5) சபையின் தவிசாளர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர் அதுசார்பாக அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் எந்த நேரத்திலும் அவரது பதவியைத் துறக்கலாம்.

(6) அமைச்சர், குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக, சபையின் தவிசாளரை அல்லது வேறு எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(7) சபையின் முதலாவதாகப் பெறப்பட்ட அனுமதியின்றி, சபையின் அடுத்து வருகின்ற மூன்று கூட்டங்களுக்கும் வருகை தரத் தவறும் சபையின் உறுப்பினர் ஒருவர் அந்நிகழ்வாலேயே அத்தகைய கூட்டங்களுள் கடைசிக் கூட்டத்தின் திகதியுடன் பயனுறுவதாக அவரது பதவியை வறிதாக்கல் வேண்டும்.

(8) அச்சட்டத்தின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஓர் உறுப்பினர் அல்லாத, பதவியை வறிதாக்கும் சபையின் எவரேனும் உறுப்பினர், மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

*சபை உறுப்பினர்களின் ஊதியம்.*

**4.** சபை உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான உசாவுதலின் பேரில் அமைச்சரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் வழங்கப்படல் வேண்டும்.

*சபைக் கூட்டங்கள்.*

**5.** (1) சபைக் கூட்டங்களானது, ஆகக் குறைந்தது மாதத்திற் கொருமுறையேனும் நடாத்தப்படல் வேண்டும்.

(2) சபையின் கூட்ட நடப்பெண் நான்காதல் வேண்டும்.

(3) சபையின் தவிசாளர் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தல் வேண்டும் அல்லது அவர் சமூகம் தராதவிடத்து, சமூகம் தரும் உறுப்பினர்களிடையே இருந்து தெரிவு செய்யப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(4) சபையானது, அதன் உறுப்பினர்களிடையேயான வெற்றிடமொன்று அல்லது அதன் ஓர் உறுப்பினரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறை எது எப்படியிருப்பினும், செயற்படலாம்.

*சபையின் இலச்சினை.*

**6.** சபையின் இலச்சினை

(அ) சபைத் தலைவரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றப்படலாம் ;அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனும் மற்றும் சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலுமன்றி, எந்த ஆவணத்திலும் பொறிக்கப்படல் ஆகாது, உறுப்பினர்கள் இருவரும் தாம் சமூகமளித்ததற்கு அடையாளமாக ஆவணத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

*காணியும் வளவுகளும் சபைக்கு உரித்தாக்கப்படுதல்.*

**7.** இச்சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணி மற்றும் வளவுகள் இத்தால் சபைக்கு உரித்தாக்கப் படுகின்றன.

*சபையின் பணிகள்.*

**8.** வைத்தியசாலையின் அலுவல்களை நிருவகிப்பதும் மற்றும் நோயாளர்களைப் பராமரிப்பதற்கான ஒரு நிறுவனம் என்ற வகையில் அது செயற்திறனாகவும் மற்றும் பயனுறுதியாகவும் விளங்குவதை உறுதிப்படுத்துவதும் சபையின் பணியாதல் வேண்டும்.

**9**. (1) வைத்தியசாலையின் கட்டுப்பாடு, முகாமை மற்றும் நிருவாகம் ஆகியவற்றுக்கு அவசியமான அல்லது உசிதமான அல்லது இடைநேர்விளைவானவாறாக உள்ள எல்லா விடயங்களைச் செய்வதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும், தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். *சபையின் தத்துவங்கள்.*

(2) ஓராம் உட்பிரிவின் மூலம் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கம் இல்லாமல், சபை பின்வரும் தத்துவங் களைப் பிரயோகிக்கலாம் :-

(அ) மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகளைக் காசாகவோ அல்லது வேறு வகையிலோ, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தோ பெறுதல் ;

(ஆ) இச்சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணி மற்றும் வளவுகளல்லாத இச்சட்டத்தின் மூலமோ, உரித்தாக்கப்பட்ட அல்லது ஏதேனும் கொள்வனவு மானியக் கொடை, கொடை, மரண சாதனக் கையளிப்பு என்பவற்றின் பயனாகவோ அல்லது வேறுவகையாகவோ, அதற்கு உரித்தாக்கப் படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையேனும் பெறுதலும், வைத்திருத் தலும் மற்றும், அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எதனையேனும் விற்றல், ஈடுவைத்தல் குத்தகைக்கு விடுதல், மானியமாகக் கொடுத்தல், உறுதியாற்றுதல், ஒப்படைத்தல், குறித்தொதுக்குதல் கொடுத்து மாற்றுதல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையின் அலுவலர்கள் மற்றும் சேவையாட்களை நியமித்தல் ஊழியத்துக்கமர்த்துதல், அவர்களுக்கு ஊதியம் வழங்குதல் மற்றும் அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவையாட்களது நியமனம், பதவியுயர்வு ஊதியம் வழங்கல் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களுக்கு விடுப்பு வழங்குதல் மற்றும் ஏனைய நலன்கள் ஆகியவை தொடர்பான ஒழுங்கு விதிகளை அமைத்தல் ;

(ஈ) வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், நடாத்துதல் மற்றும் முடிவுறுத்தல் அத்துடன் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணம் கடன் வாங்குதல் அல்லது பணத்தைத் திரட்டுதல் ;

(உ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனக் கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்தல் ;

(ஊ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இடைநேர் விளைவான அல்லது உசிதமானவாறான ஏனைய எல்லாச் செயல்களையும், விடயங்களையும் செய்தல்.

முகாமைக்குழு.

**10.** (1) சபையானது, வைத்தியசாலையின் நாளாந்த அலுவல்களை நிருவகிப்பதற்கு முகாமைக்குழுவொன்றை நியமிக்கலாம்.

(2) சபையானது, சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட முகாமைக்குழுவிற்கு, காலத்துக்குக்காலம் கையளிக்கலாம்.

(3) முகாமைக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) வைத்தியசாலையின் பணிப்பாளராகப் பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ;

(ii) வைத்தியசாலையில் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள உசாத்துணைவர்களுக்கிடையே இருந்து சபையால் தெரிவுசெய்யப்படும் மூன்று ஆட்கள் ஆயின், ஒரே நிபுணத்துவத்திலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களாதலாகாது ;

(iii) வைத்தியசாலையின் தாதித்தாயார் எனப் பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ;

(v) வைத்தியசாலைச் செயலாளர் அல்லது வைத்தியசாலைப் பிரதான நிர்வாக உத்தியோகத்தர் எனப் பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ;

(v) வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் எனப் பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள்; அத்துடன்

(vi) விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மன்றத்தின் அந்த மன்றத்தால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.

(4) வைத்தியசாலைப் பணிப்பாளர் முகாமைக்குழுவின் தவிசாளராதல் வேண்டும்.

(5) சபையின் தவிசாளர் ஏதேனும் முகாமைக்குழுக் கூட்டத் திற்குச் சமூகமளிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) முகாமைக்குழு, அத்தகைய குழுக் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மற்றும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை ஆகியவற்றைத் தீர்மானித்தல் வேண்டும்.

*அமைச்சரின் பணிப்புரைகள்.*

**11.** அமைச்சர், சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்று வதற்கான பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளை, காலத்துக்குக்காலம் சபைக்கு வழங்கலாம் என்பதுடன், சபையானது, அத்தகைய ஒவ்வொரு பணிப்புரைக்கும் இணங்குதலும் வேண்டும்.

*சபையின் நிதியம்.*

**12.** (1) சபை அதற்கெனச் சொந்த நிதியத்தைக் கொண்டிருத் தலும் பேணலும் வேண்டும்.

(2) சபையின் நிதியத்துக்கு :-

(அ) கொடை அல்லது நன்கொடை வழியாக, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து சபையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகையும் ;

(ஆ) அரசாங்கத்திலிருந்து மானியம் என்றவாறாக சபையால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகையும் ;

(இ) அறக்கொடைகள் மற்றும் முதலீடுகள் என்பவற்றி லிருந்து வருமானமாக சபை பெறக்கூடியதாக இருக்கும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவனவற்றுக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) இச்சட்டத்தின் கீழ் சபையின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் சபையினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்கும் ;

(ஆ) சபையின் உறுப்பினர்களுக்கு ஊதியமாகச் செலுத்தப் படக்கூடியனவும் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏனைய ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படக் கூடியனவும்.

(4) சபையானது நிதியத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பாக விருத்தல் வேண்டும்.

சபையின் நிதியாண்டும் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும்.

**13.** (1) பஞ்சாங்க ஆண்டே சபையின் நிதியாண்டாதல் வேண்டும்.

(2) சபையின் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களைச் சபை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**14.** இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பிலும் அத்துடன் குறிப்பாக பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சரானவர் சபையுடன் உசாவுதலின் பேரில் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் :

(அ) பின்வருவனவற்றின் மீது சபைக்கு மதியுரை வழங்குவதற்கு உசாத்துணைக்குழுக்களைத் தாபித்தல்

(i) வைத்தியசாலையில் ஏற்படும் தேவைகளை நிறைவேற்றுவதற்கான புதிய கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான ஏற்பாட்டுக்காகவும், ஏதேனும் குறிப்பிட்ட நோய்களினால் துன்பப்படும் நோயாளிகளை வைத்தியசாலைக்கு அனுமதித்தல் அல்லது அனுமதி மறுத்தல் என்பவற்றுக்கான சிபாரிசுகள் உட்பட வைத்தியசாலைகளினால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகளின் போதுமான அளவும் வினைத்திறனும் ;

(ii) இலங்கைக்குள்ளும், வெளிநாட்டிலும் சபை அலுவலர்கள், வேலையாட்களுக்கான பயிலல் பயிற்சி நெறிகளுக்கும் ஒன்றில் இந்நோக்கத்துக்கத்துக்காக இலங்கையில் ஏனைய வைத்தியசாலைகளுடனும், நிறுவனங்களுடனும் கூட்டிணைவதற்கு அல்லது வேறுவகையில் துணைக்குழுவினால் தீர்மானிக்கக் கூடியவாறு பொருத்தமான அத்தகைய அமைப்பு மற்றும் அத்தகைய நோக்கங்களுக்குமான ஏற்பாடு ;

(iii) அமைச்சரானவர் உசாத்துணைக்குழுவொன்றுக்கு அதன் மதியுரைக்காக குறிப்பீடு செய்யக்கூடியதான ஏதேனும் ஏனைய விடயங்கள்.

(ஆ) உசாத்துணைக் குழுக்களின் உறுப்பினர்களின் ஊதியம் ;

(இ) வைத்தியசாலைக்குள் நுழையும் ஆட்களின் அனுமதி அல்லது உட்பிரவேச மட்டுப்பாடு அத்துடன் அதனுள் உட்பிரவேசிக்கும் ஆட்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துதலும்.

*தவறுகள்.*

**15.** (1) (அ) வைத்தியசாலையின் வளவுக்குள் எந்தவொரு ஆளையும் தொந்தரவு செய்யக்கூடிய அல்லது அனுமதிக்கும் வகையிலான ஏதேனும் ஆபாசமான மரியாதையற்ற அல்லது தவறான மொழியை அல்லது அபிநயம் அல்லது நடாத்தையைப் பிரயோகிக்கும் அல்லது ஏற்படுத்தும் ;

(ஆ) வைத்தியசாலையின் நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்படும் ஆதனத்தின் ஏதேனும் ஒரு பகுதி மீது துப்புதல் அல்லது வேண்டுமென்று சேதத்தை ஏற்படுத்தும் ;

(இ) புகைத்தலைத் தடை செய்யும் அறிவித்தல் காண் பித்தலுக்கு வைக்கப்பட்டிருக்கும் வைத்திய சாலையின் வளவுக்குள் எப்பகுதியாலும் புகைத் தல் அல்லது கொளுத்தப்பட்ட சுங்கான் சுருட்டு சிகரட் அல்லது புகைத்தலுக்கான பொருட்களை எடுத்துச் செல்லும் ;

(ஈ) ஏதேனும் போத்தல் திரவம் அல்லது ஏனைய பொருட்கள் அல்லது ஆட்களுக்குத் தொந்தரவு செய்யக்கூடிய அல்லது எவரேனும் ஆளுக்கு அல்லது ஆதனமொன்றுக்குச் சேதத்தை அல்லது காயத்தை எற்படுத்தக்கூடியதான பொருட்களை வைத்தியசாலைக்கு வெளியே வீசும் ;

(உ) வாகனம் செலுத்துவதைத் தடைசெய்யும் அறிவித் தல் காண்பித்தலுக்கு வைக்கப்பட்டிருக்கும், வைத்தியசாலையின் வளவுக்குள் எப்பகுதியிலும் வாகனத்தை நிறுத்தும் ;

(ஊ) வைத்தியசாலையின் வளவுக்குள் ஏதேனும் தாவரத்தை சேதப்படுத்தும் அல்லது அழிக்கும் அல்லது அங்கிருந்து ஏதேனும் தாவரத்தை எடுத்துச் செல்லும், சேகரிக்கும் அல்லது

அகற்றும் ; அல்லது

(எ) ஏதேனும் இணைப்புக்கள் மற்றும் சாதனம் உட்பட வைத்தியசாலை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் ஆதனத்தை அழிக்கும் அல்லது சேதப்படுத்தும்.

ஆளொருவர், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் ஒருவரின் முன்னதாக சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் குற்றமொன்றுக்கான வழக்குத் தொடுப்பொன்றில், ஏதேனும் இடம் வைத்திய சாலைகளுக்குள் உள்ளதா? அல்லது ஏதேனும் ஆதனம் இந்த வைத்தியசாலையின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதா என்பது பற்றி ஒரு கேள்வி எழும்பின், குறித்துரைக்கப்பட்ட வைத்தியசாலை வளவுக்குள் உள்ளது அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆதனம் வைத்தியசாலை நோக்கங்களுக்காகப் பாவிக்கப்படும் என்று பயன்படும் வைத்தியசாலைப் பணிப்பாளரின் கைப்பட்ட சான்றிதழ், கையொப்ப ஆதாரமின்றி ஏல்தகைமைச் சான்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதன்கண் குறிப்பிட்ட நிகழ்வுகளின் சான்றாகவும் இருத்தல் வேண்டும்.

*பகிரங்க அலுவலர்களைச் சபைக்கு நியமித்தல்.*

**16.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க அலுவலர் எவரும் அவ்வலுவலரினதும் பொதுநிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க அலுவலர் எவரும் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடை

யனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க அலுவலர் எவரும் சபையின் பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை புரிவதற்கு அரசாங்கத்துடன் ஒப்பந்தத்திற்குட்பட்டுள்ள ஆள் ஒருவரை சபை தொழிலுக்கு அமர்த்துமிடத்து அந்த ஆளினால் சபைக்குப் புரியப்படும் சேவைக்காலப்பகுதியெதுவும் அத்தகைய ஒப்பந்தத்தின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இச் சட்டத்தின் கீழ் சபையின் உறுப்பினர் களாலும் சபை அலுவலர்கள் முதலானோராலும் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பு*

**17.** (1) வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும் இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினருக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு சேவையாளருக்கு அல்லது முகவருக்கெதிராக இருத்தல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன் சபையினால் அல்லது அதற்கு எதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் வழக்கு அல்லது வழக்குத்தொடுப்பில் சபையினால் உறப்படும் எவையேனும் செலவுகள், சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும், என்பதுடன், அத்தகைய ஏதேனும் வழக்கு அல்லது வழக்குத்தொடுப்பில் சபைக்குச் செலுத்தப்படும் அல்லது சபையினால் அறவிடப்படும் ஏதேனும் செலவு சபையின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன் அவருக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட ஏதேனும் வழக்கு அல்லது வழக்குத் தொடுப்பில் உறப்படும் செலவு எதுவும், அச்செயல் நல்லெண்ணத்துடன்

செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய வழக்கு அல்லது வழக்குத் தொடுப்பில் அவரினால் அத்தகைய செலவு அறவிடப்பட்டாலொழிய சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**18**. சபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காகவும் அதன் கருத்திற்குள்ளும் பகிரங்க சேவையாளர்களாக இருத்தல் வேண்டும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

*சபையின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**19**. சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் சபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**20**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**21**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, "விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றம்" என்பது, 1998 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றம் எனப் பொருள்படும்.

*பொருள் கோடல்.*

**அட்டவணை** (பிரிவு 2,7,9)

*மேல்மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவில் மற்றும் கட்டுநாயக்க- சீதுவ நகர சபை எல்லைகளுக்குள் பண்டாரவத்தையில் வட்டார இல. 8 - பண்டாரவத்தை, நீர்கொழும்பு கொழும்பு பிரதான பாதையில் அமைந்துள்ள, அனுமதிபெற்ற நில அளவையாளர் கே. பி. சந்திரசேகரவினால், 1995 ஆம் ஆண்டு பெப்புருவரி 16 ஆந் திகதியிடப்பட்ட 1055 ஆம் இலக்க வரைபடத்தினாலும், அனுமதிபெற்ற நில அளவையாளர் ஏ.ஜே.பி விஜேகோனினால் 1992 ஆம் ஆண்டு ஒற்றோபர் 16 ஆந் திகதியிடப்பட்ட 32/92 ஆம் இலக்க வரைபடத்தினாலும் (நில அளவையாளர் அதிபதியினால் உண்மைப்படுத்தப்பட்ட பூர்வாங்க வரைபடம் கம்- 1627 இன் 3 ஆம் காணித்துண்டின் ஒரு பகுதி) 1 ஆம் காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்ட அனைத்துக் காணித்துண்டங்களுமாகும்; அத்துடன் 1 ஆம் காணித் துண்டு எனப்பட்டதின் எல்லைகளாக: வடக்கில் : 32/92 ஆம் இலக்க வரைபடத்தின் 7ஆம் காணித்துண்டும்; கிழக்கில்: -9 ஆம் காணித்துண்டும் மற்றும் 32/ 92ஆம் இலக்க வரைபடத்தின் 8 ஆம் காணித்துண்டின் எஞ்சிய பகுதியும் ; தெற்கில் : 32/92 ஆம் இலக்க வரைபடத்தின் 8 ஆம் இலக்கக் காணித்துண்டின் எஞ்சிய பகுதியும்; மேற்கில் : நீர்கொழும்பு - கொழும்பு பிரதான பாதையும்இருக்கும்; அத்துடன் இதன் பரப்பளவு மூன்று ஏக்கர்கள் (ஏ3.றூ.0.பே0) அல்லது 1.2140 ஹெக்டேயர்கள் இதன்கண் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும்.*

***பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.***